# பன்முக நோக்கில்
# தமிழ் இலக்கியம்




பதிப்பாசிரியர்

**முனைவர் த. கீதாஞ்சலி**

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

வைரவிழாவை முன்னிட்டு

தமிழ்த்துறை (சுயநிதி)

நடத்திய

Dr. P. MAHESWARI
Associate Professor
Dept. of Tamil
N.G.M. College, Pollachi.

# பன்முக நோக்கில்
# தமிழ் இலக்கியம்

**பன்னாட்டுக் கருத்தரங்கம் – 2018**

**கட்டுரைத் தொகுப்புகள்**

பதிப்பாசிரியர்

**முனைவர் த. கீதாஞ்சலி**

பதிப்புக்குழு

**முனைவர் த. பரமேசுவரி**

**முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா**

**முனைவர் ம. சித்ரகலா**

**முனைவர் ந. பிரகாஷ்**

**முனைவர் மு. சுகந்தி**

**முனைவர் ந. ஜெயசுதா**

**முனைவர் இரா. ஜெயந்தி**

**பேரா. ர. சூர்யா**

Estd : 1957

**தமிழ்த்துறை (சுயநிதி)**

**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)**

(தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'ஏ' தகுதி,

ஐ.எஸ்.ஓ. 9001-2015 தரச்சான்றிதழ் பெற்றது)

பொள்ளாச்சி - 642 001.

**பன்முக நோக்கில் தமிழ் இலக்கியம்**

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | முனைவர் த. கீதாஞ்சலி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | ஜூலை 2018 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி<br>பொள்ளாச்சி - 642 001. |
| பக்கங்கள் | : | 244 |
| விலை | : | |
| அச்சிட்டோர் | : | காவேரிடெக் கணிப்பொறி அச்சுக்கூடம்<br>21/2, ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி. |

**ISBN No. : 9789387009271**

**PANMUKA NOKKIL THAMIZH ILAKKIYAM**

(International Seminar)

| | | |
|---|---|---|
| Editor | : | Dr. T. Geethanjali |
| Copyright's | : | Editor |
| First Edition | : | July 2018 |
| Published | : | Tamil Department<br>Nallamuthu Gounder Mahalingam College,<br>Pollachi - 642 001. |
| Pages | : | 244 |
| Price | : | |
| Printing at | : | Cauveritech Computerised Print Shop<br>21/2, Rajamill Road, Pollachi. |

12. சங்க இலக்கியத்தில் வெளிப்படும் மலை உறை தெய்வம் குறித்தான பதிவுகள் 70
- முனைவர் இரா. ஜெயந்தி

13. கொங்கு வட்டார வாழ்வியல் மா.நடராசன் சிறுகதையை முன்வைத்து சில குறிப்புகள்... 77
- கோ. கலைவாணி

14. அகநானூற்றில் பெண்களின் நிலை 81
- ச. கவிதா

15. தூரன் படைப்புகளில் இளைஞர் மேம்பாட்டுக் கருத்துகள் 85
- முனைவர் ப. கொழந்தசாமி

16. இலக்கியங்களில் அடித்தட்டு மக்களின் வரலாறு 92
- ச. குமார்

17. புனைவு 96
- ஆ. லியோ கிளமண்ட்

18. புறநானூற்றில் பண்பாடு விழுமியங்கள் 101
- முனைவர் க. மகேஷ்வரி

19. முத்தொள்ளாயிரத்தில் பெண்மொழி 105
- இரா. மணிகண்டன்

20. பண்டைய சேரநாடும் இன்றைய கேரளமும் 110
- அ. மகபுபூ

21. பாரதிபாலன் சிறுகதைகளில் குடும்பச் சிக்கல்கள் 113
- மு. முகமது அலி ஜின்னா

22. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளும், மனிதவாழ்க்கையும் - ஓர் பார்வை 119
- இராசா. முருகேசன்

23. பழனி முருகவழிபாட்டில் படையல்கள் 123
- முனைவர் இரா. இரவிச்சந்திரன்
- சீ. முத்துலட்சுமி

# 20 பண்டைய சேரநாடும் இன்றைய கேரளமும்

**அ. மகபுபூ**
உதவிப் பேராசிரியர்,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## சேரநாடு

சங்க காலத்தில் கேரளம் தமிழகத்தின் அங்கமாகவே விளங்கியது. அது சேரநாடு என்றழைக்கப்பட்டது. சமூகப்பழக்கவழக்கங்கள், மொழி, சமுதாய அமைப்பு ஆகியவற்றில் தமிழகத்திலிருந்து இப்பகுதி வேறுபாடு கொண்டதாக இருக்கவில்லை. சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர் ஆண்டனர். அதில் கூறப்படும் சேர நாட்டையே இன்றைய கேரளம் என்கிறோம். சங்க காலத்திலத்திற்குப் பின்புதான் இப்பகுதி தனக்கே உரித்தான தனித்தன்மையை வெளிப்படுத்தத் தொடங்கியது. பண்டைய சேரநாடு இன்றைய கேரளம் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. இப்பகுதிக்கு ஆரியர்கள் வடக்கிலிருந்து குடியேறத் தொடங்கிய பின்பு பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆரியர்களின் குடியேற்றம் கி.பி. 6-8-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது.

## கேரளம் பெயர் காரணம்

சேரளம் என்ற சொல் மருவி கேரளம் என்று வழங்கப்படுகிறது. (சேர் + அளம் = சேரளம்) கடல் உள்வாங்கியதால் அதிகமாகச் சேர்ரும் அளமும் நிறைந்த நிலப்பகுதி சேரளம் என்று அழைத்தனர் பின்பு அது கேரளமாக மருவியது. அதுபோல 'மலைநாடு', 'மலைவாரம்' என்ற சொல் பின்னாளில் மலபார் என்றும் மாறியது. தமிழகத்தின் எல்லையாக தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் கூறுகையில்,

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம் என்று கூறினார். இதனையே சற்று விளக்கமாகக் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் கூறுகையில்,

> "வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
> வேங்கடம் குமரி தீம்புனல் பௌவமென்
> றின்னான் கெல்லை யகவயிற் கிடந்த"

என்று கூறியுள்ளார்.

சேர நாட்டின் எல்லையைக் கூறுகையில்,

“வடக்குத்தலம் பழனி வாழ்கீழ் செங்கோடு
குடக்குத்திசை கோழிக்கோடாம் - கடற்கரையின்,
ஓரமது தெற்காகும் ஓரெண்பதன் காதம்
சேரநாட்டு எல்லையெனச் செப்பு”

என்ற பாடலின் மூலம் வடக்கு பழனி முதல் மேற்கு கோழிக்கோடு வரை சேரநாடு இருந்ததை அறியமுடிகிறது.

## கேரளம் பற்றிய வரலாற்றுப் புனைகதை

பரசுராமன் நாடு, திருமாலின் பத்து அவதாரங்களில் ஆறாவது அவதாரம் பரசுராமன் அவதாரம். பரசு என்ற வட சொல்லின் பொருள் மழு, மழுவை ஏந்திய ராமன் பரசுராமன். சத்திரியர்கள் மீது சினம் கொண்ட பரசுராமன் உலகத்திலுள்ள ஆண் சத்திரியர்கள் அனைவரையும் கொன்று குவித்து அவர்கள் குருதியை ஐந்து பெரிய குளங்களில் தேக்கிவைத்தான் என்றும், சினம் தணிந்த பரசுராமன் வருணன் பூமாதேவியோடு கன்னியாகுமாரிக்குச் செல்கிறான். குமரி முனையிலிருந்து தன் கை மழுவை வடக்கு நோக்கிக் கடலில் எறிந்தான். (கோகர்ணத்திலிருந்து தெற்கே கன்னியாகுமரி நோக்கி மழுவை எறிந்தான் என்று கூறுவர்) அம்மழு 160 காதம் தொலைவிலுள்ள ‘கோகர்ணம் வரை உள்ள கடல் உள்வாங்கி கரைப்பகுதி உருவாயிற்று. இக்கரைப்பகுதி பரசுராமன் நாடு (கேரளம்) என்று புராணக்கதை கூறுகிறது. தான் உருவாக்கிய கரைப்பகுதியில் 64 நம்பூதிரி பிரமணர்களை அழைத்து வந்து பரசுராமன் குடியமர்த்தினான் போன்ற புராணக்கதைகள் கேரளம் உருவானதை கூறுகிறது.

## தமிழ் இலக்கியங்களில் சேர நாட்டின் பங்களிப்பு

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சேரநாட்டு மன்னர்கள் மற்றும் மக்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து சேர அரசர்களை மட்டும் பாடும் நூலாகும். சேர நாட்டார் கேரளத் தமிழர்களே என்பதற்கு இந்நூல் சான்று பகர்கிறது. பதிற்றுப்பத்து முதல் மூன்று நூற்றாண்டுகள் ஆண்ட சேர மூவேந்தர் பரம்பரைச் செய்திகளைத் தெரிவிக்கிறது. முதல் பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பத்திற்கும் பத்துப் பாடல்கள் வீதம் நூறு பாடல்களைக் கொண்டது. அகவற்பாவிலான இந்நூல் பாடாண்திணை என்ற ஒரே திணைப் பாடல்களால் ஆனது. வேறு எட்டுத்தொகை நூல்களில் எதற்கும் இச்சிறப்பில்லை.

"வாரா ராயினும் இரவலர் வேண்டித்
தேரின் தந்தவர்க்கு ஆர்பதன் நல்குமே
நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல் - கொடைபற்றி
சினனே னாமம் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை
தெறல் கடுமையொடு பிறவுமிவ் வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழிநடை யாகும்" (பதிற்றுப் பத்து)

இவ்வாறாக அரசியல் நிலைப்பற்றிப் பதிற்றுப்பத்து கூறுகிறது.

பரிபாடலில் கூறப்பெறும் பரணன் கானம், கண்ணன் காடு, காக்கையூர் ஆகிய ஊர்கள் சேர நாட்டு ஊர்களே எனச் செப்பேடுகளும் கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன. பதிற்றுப்பத்தின் பதிகச் செய்திகள் வராற்றிற்குப் பெரிதும் உதவுவன. நன்னன் போன்ற குறுநில மன்னர்களும், தகடூர் அதியன் வெல்லப்பட்டதும் மேற்குக் கடலில் கப்பல்களைத் தாக்கும் கடம்பர்களை அடக்கியதையும் போன்ற வரலாற்றுச் செய்திகள் இதன் கண் உள்ளன. 2 முதல் 6 ஆம் பத்துவரை உதியஞ்சேரல் குடியையும், 7 முதல் 9 ஆம் பத்துவரை இரும்பொறை மரபையும் பேசுகின்றன. இவற்றால் பதிற்றுப்பத்து புறநானூற்றைப் போலவே வரலாற்றுப் பெட்டகமாக விளங்குதலை உணர முடியும். இதைப் போன்ற சேர நாட்டின் சிறப்பினையும் சேர மன்னர்களின் சிறப்பினையும், தொல்காப்பியம், புறநானூறு குறுந்தொகை, நற்றிணை மற்றும் பழமொழி நானூறு போன்ற நூல்களின் மூலம் அறியமுடிகிறது.

## கேரளத் தமிழர் சமுதாயம்

கேரளம் மலையாள மொழியும் தோன்றுவதற்கு முன்பு அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதற்கு புராணகதை முதல் சங்ககால இலக்கியங்கள் வரை சான்று பகர்கின்றன. இன்றும் கேரளத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் வாழ்கின்றனர். கேரளப்பள்ளிகளில் தமிழ் மலையாளம் என இரு மொழிப் பாடங்கள் உள்ளன. மேலும், ஓர் தமிழர் எவ்வித துணையும் இன்றி மலையாள பேச்சு மொழியே அறிந்து கொள்ள முடியும். அதுபோல் அவர்களுக்கும் தமிழை அறிந்துகொள்ள முடிகிறது. இன்னும் மலையாளத்தில் உள்ள பல வார்த்தைகள் கொடுந்தமிழ் செய்யுள் வார்த்தைகளாக இருப்பதை அறியமுடிகிறது. இவ்வாறு பல சான்றுகள் பண்டைய சேரநாடே இன்றைய கேரளம் பண்டைத் தமிழ் மக்களே இன்றைய கேரள மக்கள் என்பதை அறிய உதவுகிறது.

ISBN-9789387009271
9 789387 009271